# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093614

1. District : மாவட்டம் : தூத்துக்குடி
   PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி
   Year: ஆண்டு : 2020
   FIR No.: மு.த.அ. எண் : 04/2020
   Date: நாள் : 13.11.2020

2. (i) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: 102 r/w
   (ii) Act சட்டம்: PC Act, 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : --

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.11.2020 ம் தேதி மாலை 05.00 மணிக்கு முன்பாக
   Date from : நாள் முதல்
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.11.2020
   Time : நேரம் 12.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.11.2020
   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 10 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி — தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகம், தூத்துக்குடி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.A.இருதயராஜ்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — துணை ஆய்வுக்குழு அலுவலர்
   (g) Address : முகவரி — திருநெல்வேலி,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   (1.)திரு.S.ரவிக்குமார், 48/2020, த/பெ சுப்பிரமணியன், துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், தூத்துக்குடி. (2.)திரு.அ.சிவசங்கரநாராயணன், 50/2020, த/பெ அரிகிருஷ்ணன், கண்காணிப்பாளர், இணை இயக்குநர் அலுவலகம், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், தூத்துக்குடி மற்றும் 4 நபர்கள். (தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது.)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   இல்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

திரு.E.மெக்லரின் எஸ்கால்,
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊ.த.(ம) க.துறை,
திருநெல்வேலி
(பொ) தூத்துக்குடி 13.11.2020.

Name பெயர் ………………
Rank நிலை ……………… No. எண் ……….

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.11.2020 at 14.00 hrs

தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2020, பிரிவு 102 Cr.P.C r/w 7 of PC Act, 1988 as Amended in 2018.

**Accused :**

1. Tr.S.Ravikumar, aged 48/2020
   S/o Tr.Subramanian,
   Deputy Director,
   Industrial Safety and Health,
   Anna Nagar, 8th Street,
   Thoothukudi.

2. Tr.A.Sivasankara Narayanan,
   aged 50/2020,
   S/o Tr.Arikrishnan,
   Superintendent,
   O/o the Joint Director,
   Industrial Safety and Health,
   Thoothukudi.

3. Tmt.S.Palkani, aged 44/2020,
   W/o Tr.Tharmalingam,
   Assistant,
   O/o the Joint Director,
   Industrial Safety and Health,
   Thoothukudi.

4. Tmt.S.Gomathi, aged 37/2020,
   W/o Tr.Mayakesavan,
   Junior Assistant,
   O/o the Joint Director,
   Industrial Safety and Health,
   Thoothukudi.

5. Tr.S.Ramajeyam, aged 35/2020,
   S/o Tr.Selladurai,
   Driver,
   O/o the Joint Director,
   Industrial Safety and Health,
   Thoothukudi.

**Private Individual :**

6. Tr.P.Ramakrishnan, aged 42/2020,
   S/o.Tr.Palraj,
   No.4/710-31, Amman Kovil Street,
   Pudukottai,
   Thoothukudi District.

**பணிந்தனுப்பப்படுகிறது :-**

தூத்துக்குடி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் பணி செய்யும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தொழிற்சாலைகளிலிருந்து தீபாவளி பண்டிகைக்காக பணம், இனிப்பு பெட்டிகள் (Sweet box), மற்றும் பட்டாசு பெட்டிகள் வாங்குவதாக கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் 12.11.2020-ம் தேதி மாலை 05.00 மணி முதல் மாலை 07.40 மணி வரை திரு.A.இருதயராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி அவர்களுடன் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.A.இருதயராஜ், அவர்கள் கொடுத்த புகார் மனுவை 13.11.2020-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பொறுப்பு அலுவலக பணியில் இருந்தபோது பகல் 12.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2020, பிரிவு 102 Cr.P.C r/w 7 of PC Act, 1988 as Amended

in 2018–ன் படி மார்ஜினில் கண்ட ஆறு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் A.இருதயராஜ், துணை ஆய்வு குழு அலுவலர், திருநெல்வேலி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி சுப்பையாமுதலியார்புரம் 4வது தெருவில் தெற்கு பார்த்து அமைந்துள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் பணி செய்யும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தொழிற்சாலைகளிலிருந்து தீபாவளி பண்டிகைக்காக பணம், இனிப்பு பெட்டிகள் (Sweet box), மற்றும் பட்டாசு பெட்டிகள் வாங்குவதாக கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் 12.11.2020-ம் தேதி மாலை 05.00 மணிக்கு தூத்துக்குடி சுப்பையாமுதலியார்புரம் 4வது தெருவில் அமைந்துள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் தணிக்கை செய்ததில் மேற்படி அலுவலகத்தின் முன் வராண்டாவின் உள்ளே நுழைந்தபோது முன் ஹாலில் அமர்ந்திருந்த இணை இயக்குநர் ஓட்டுநர் திரு.செ.ராமஜெயம் என்பவரின் மேல்பக்க சட்டை பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணம் ரூ.7,590/-ம், மற்றும் அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் 3 கவர்களில் இருந்த மொத்தம் ரூ.2,000/- ஆக மொத்தம் ரூ.9,590/- மற்றும் அவரது கையில் வைத்திருந்த அம்மன்பட்டு ஜவுளி ரெடிமேட் என்று அச்சிடப்பட்ட ஊதா மற்றும் வெள்ளை நிற பிக்சாப்பர் பையில் 21 இனிப்பு பெட்டிகள் மற்றும் ஒரு மெழுகுவர்த்தி பெட்டி ஆகியவை இருந்தன. டிரைவர் திரு.செ.ராமஜெயம் அவருக்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஸ்ரீவைகுண்டம் தாலுகா தன்னூத்து கிராமம் மீனாட்சிபட்டி அருகே உள்ள Intersnack முந்திரி அலுவலகத்தில் டிரைவராக பணிபுரியும் திரு.P.ராமகிருஷ்ணன் த-பெ பால்ராஜ், என்பவரின் வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணம் ரூ.10,000/- வைத்திருந்தார். மேற்படி அலுவலகத்தின் முன் அறையின் வலது பக்க அறையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திருமதி.S.கோமதி என்பவரின் கேண்ட் பாக்கில் ரூ.500/-ம், கேண்ட் பர்சில் ரூ.500/-ம் ஆக மொத்தம் ரூ.1,000/- வைத்திருந்தார். அவரது மேஜையின் மீது வேலவன் சூப்பர் மார்க்கெட் என்று பிரிண்ட் செய்யப்பட்ட பையில் இருந்த 6 ஸ்வீட் பாக்ஸ் இருந்தது. அவருக்கு எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த உதவியாளர் திருமதி.S.பால்கனி என்பவரின் பர்ஸில் ரூ.2,210/- இருந்தது. மேற்படி அலுவலகத்தின் முன் ஹாலுக்கு அடுத்த

வடபக்க அறையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த அலுவலக கண்காணிப்பாளர் திரு.அ.சிவசங்கர நாராயணன் பேண்ட் பாக்கெட்டில் பர்ஸில் கத்தையாக இருந்த ரூ.10,000/-ம், முன்பக்க இடது பக்க சட்டை பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணம் ரூ.12,000/-ம் அவர் அருகே கிழிக்கப்பட்டு கீழே கிடந்த 4 வெள்ளை மற்றும் 1 பிரவுன் கலர் கவர்களும், இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் பிரவுன் கலர் கவரில் ரூ.800/-ம் ஆக மொத்தம் ரூ.22,800/- இருந்தது. மேலும், அவரது அருகில் இருந்த 13 இனிப்பு பெட்டிகளும், 4 வெடி பாக்ஸ்களும் இருந்தது. நடு ஹாலுக்கு அடுத்ததாக அமைந்திருந்த இணை இயக்குநர் அறையில் இணை இயக்குநர் இருக்கைக்கு அருகில் உள்ள அலமாரி பக்கம் ஒளிந்து நின்று கொண்டிருந்த தூத்துக்குடி மாவட்ட தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் திரு.S.ரவிக்குமார் என்பவரின் வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணம் ரூ.29,750/- இருந்தது. அந்த அலுவலகத்திலிருந்த மொத்தம் ரூ.75,350/- மற்றும் 40 இனிப்பு பெட்டிகள், 4 வெடி பாக்ஸ்கள் ஆகியவற்றிற்கும் பணத்திற்கும் உரிய விளக்கம் கேட்க சம்பந்தப்பட்ட நபர்களது விளக்கம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இல்லை. 40 இனிப்பு பெட்டிகளும், 4 வெடி பாக்ஸ்களும் செயல்முறைகளில் குறிப்பிடப்பட்ட பின் அந்த அலுவலகத்திலேயே விடப்பட்டது. மேற்படி பணம் அலுவலக பணியாளர்கள் கையூட்டாக பெற்ற மற்றும் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று சந்தேகப்படும்படியாக இருந்ததாலும், மேற்படி பணத்தை 12.11.2020 மாலை 05.00 மணி முதல் மாலை 07.40 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகளின்படியும் மற்றும் பின் இணைப்பு 1 முதல் 6 –ன் படியும்

| | | |
|---|---|---|
| 1. | பின் இணைப்பு – 1 | ரூ.9,590/- |
| 2. | பின் இணைப்பு – 2 | ரூ.1,000/- |
| 3. | பின் இணைப்பு – 3 | ரூ.2,210/- |
| 4. | பின் இணைப்பு – 4 | ரூ.22,800/- |
| 5. | பின் இணைப்பு – 5 | ரூ.29,750/- |
| 6. | பின் இணைப்பு – 6 | ரூ.10,000/- |
| | மொத்தம் | ரூ.75,350/- |

உள்ள தொகை ரூ.75,350/- கைப்பற்றப்பட்டது. இவ்வாறு கணக்கு காட்ட முடியாத பணம் வைத்திருந்த (1.)திரு.S.ரவிக்குமார், துணை இயக்குநர், தூத்துக்குடி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், தூத்துக்குடி (2.)திரு.அ.சிவசங்கரநாராயணன், கண்காணிப்பாளர், (3.)திருமதி.S.பால்கனி, உதவியாளர், (4.)திருமதி.S.கோமதி, இளநிலை உதவியாளர், (5.)திரு.S.ராமஜெயம், டிரைவர், மற்றும் அந்த அலுவலகத்திற்குள் டிரைவரின் அருகே நின்று கொண்டிருந்த தனி நபரான (6.)திரு.P.ராமகிருஷ்ணன் த-பெ

பால்ராஜ் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டு இத்துடன் செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.75,350/-, பின் இணைப்புகள் 1 முதல் 6 வரையும் உள்ள வழக்கு சொத்துக்கள், வாக்குமூலங்கள் மற்றும் இதர வழக்கு சொத்துக்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- அ.இருதயராஜ், 13.11.2020, Dy. Inspection cell officer, Tirunelveli. Sir, Received the complaint on 13.11.2020 at 12.00 hrs, I am registering a case in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.04/2020, U/s 102 Cr.P.C r/w 7 of PC Act, 1988 as Amended in 2018 on today (13.11.2020) at 12.00 hrs Sd/- 13.11.2020, E.Mcclarine Eskhal, Deputy Supdt. of Police, V&AC, Tirunelveli, (i/c) Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.A.இருதயராஜ் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு – 1 முதல் 6, (1.)திரு.S.ரவிக்குமார், துணை இயக்குநர், தூத்துக்குடி தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், தூத்துக்குடி (2.)திரு.அ.சிவசங்கரநாராயணன், கண்காணிப்பாளர், (3.)திருமதி.S.பால்கனி, உதவியாளர், (4.)திருமதி.S.கோமதி, இளநிலை உதவியாளர், (5.)திரு.S.ராமஜெயம், டிரைவர், (6.)திரு.P.ராமகிருஷ்ணன் த-பெ பால்ராஜ் (7.) திருமதி.ஊ.அங்காளீஸ்வரி, தரம் உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் (8.)திருமதி.ஏ.ஜான்சிராணி, உதவியாளர் ஆகியோர்களது வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன்.

(E.மெக்லரின் எஸ்கால்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
திருநெல்வேலி பிரிவு.
(பொ) தூத்துக்குடி பிரிவு. 13.11.2020.